Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 5, Issue - 2, May 2026** **E-ISSN: 2583-0481**
**MLA, DOAJ Indexed**

# Habitat and Economic Conditions of the Tribal Communities of Tamil Nadu

**A. Deepika,** Research Scholar of Tamil, Reg. No.: 20PHTMF008, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0003-0444-7996**
**Dr. C. Priyadharshini,** Assistant Professor of Tamil, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0009-1121-5502**
**DOI: 10.5281/zenodo.20474064**
**Received:** 31 December 2025; **Revised:** 14 February 2026; **Accepted:** 19 March 2026; **Available Online:** 31 May 2026

## Abstract

*Contemporary humanity is divided into diverse races and communities, among which indigenous tribal groups are regarded as some of the most ancient populations. For centuries, these communities have inhabited traditional ecological regions such as mountains and forests, developing cultures that remain deeply interconnected with nature. Their social life and cultural practices are closely associated with the natural environment in which they reside. Tribal communities possess distinctive systems of worship, customs, rituals, traditional medicine, and indigenous agricultural practices. Their livelihood patterns are largely forest-dependent, relying on the collection of food resources, fuel, construction materials, and medicinal herbs from woodland ecosystems. Hence, within the context of Tamil Nadu, this study explores the habitat, distribution, livelihood patterns, and economic conditions of tribal communities.*

**Keywords:** Tribal, Nilgiris, Forest Produce, Western Ghats, Eastern Ghats.

## References

[1] Ashvathi Pooja, Kau. "Inavaraviyal Nokkil Kumarivaazh Pazhankudi Kaani Ina Makkalin Varalaatru Suvadugal." *Sengaanthal*, Malar 5, Idhal 1, November 2025.
[2] Iravikumar, Ku. "Inavaraiviyal Nokkil Pazhankudigal Matrum Nadodigal." *Potramarai Aayvidhal*, Idhal 7, May 2025.
[3] Kanthaiya Pillai, Na. Si. *Thamil-Thamil Agaradhi*. Aasiriyar Noorpathippu Kazhagam, 2003.
[4] Kalaichollakka Kuzhu. *Kalaichol Peragaradhi*. Thamil Inaiya Kalvi Kazhagam, 2009.
[5] Sandhiya Nadarajan. *Madhurai Thamil Peragaradhi*. Sandhiya Pathippagam, 2001.
[6] Sa. Ve. Subramaniyan. *Silappadhigara Solladaivu*. Thamil Pathippagam, 1972.
[7] Subramaniyan, Sa. Ve. *Samuga Viyal Manida Viyal Kalaichol Vilakka Agaradhi*. Thamil Palkalaik Kazhagam, 2003.
[8] Subbulakshmi, Mu. Pe. "Inavaraviyal Nokkil Kazhudhai Paadhai." *Thamil Mozhi Matrum Ilakkiya Annaattu Aayvidhal*, Thogudhi 8, Idhal 2, January 2026.
[9] Deepa, A. "Pazhankudiyinar Panpaadu Matrum Thozhil Muraigal." *Sarvesa Thamil Aayvidhal*, Thogudhi 7, Malar 3, January 2022, doi:10.34256/irjt22361.
[10] Thurai Murugan, Se. "Tholkudiyum Thol Thamilum." *Padhivugal Minnidhal*, ISSN 1481-2991.
[11] Bhagath Singh. *Solagar Vaazhvum Panpaadum*. Adaiyalam Pathippagam, 2019.
[12] Bakthavatchala Bharathi. *Thamizhaga Tholkudigal*. Adaiyalam Pathippagam, 2017.
[13] Bakthavatchala Bharathi. *Thamizhaga Pazhankudigal*. Adaiyalam Pathippagam, 2013.

[14] Puliyur Kesigan, Thelivuraiyaasiriyar. *Thirukkural Parimelazhagar Urai Sempathippu*. Poompukar Pathippagam, 2018.
[15] Maheswaran, Sa. *Neelagiri Kurumbar Pazhankudi Oviya Marapu*. Indhiya Pazhankudi Makkal Panpaattu Maiyam, Neelagiri, 2018.
[16] Vengadasami Naattar, Naa. Mu. *Silappadhigaram Moolamum Uraiyum*. Sharadha Pathippagam, 2008.

**Thagavalalargal (Witness)**

[17] Rajamma. Personal interview. Masinagudi Koodalur, age 62.
[18] Madhumitha. Personal interview. Kunjappanai Kothagiri, age 18.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** Nil

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்



மலர் - 5, இதழ் - 2, வைகாசி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

# தமிழகப் பழங்குடியின மக்களின் வாழிடச் சூழலும் பொருளாதார நிலையும்

**ஆ. தீபிகா,** முனைவர்பட்ட ஆய்வாளர், பதிவுஎண்: 20PHTMF008, தமிழ்த்துறை,
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0003-0444-7996
**முனைவர் ச. பிரியதர்ஷினி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்,தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0009-1121-5502

**ஆய்வுச் சுருக்கம்**

*மனித குலம் இன்று பல்வேறு இனங்களாகவும் சமூகங்களாகவும் வேறுபட்டுக் காணப்படுகிறது. இதில் மிகத் தொன்மையானவர்களாகக் கருதப்படுபவர்கள் பழங்குடியின மக்கள். பல நூற்றாண்டுகளாக மலை வனம் உள்ளிட்ட இயற்கைச் சூழல் நிரம்பிய இடங்களில் தமது மரபார்ந்த வாழ்விடங்களைக் கொண்டு இயற்கையின் வழித்தோன்றல்களாக இயற்கையிலிருந்து பிரிக்க இயலாத பண்பாட்டைக் கொண்ட சமூகத்தினராய் பழங்குடியினர் திகழ்கின்றனர். பழங்குடியினர் தங்களுக்கேயுரிய வழிப்பாட்டு முறைகளையும், மரபுகளையும், சடங்குகளையும், மருத்துவ முறைகளையும் மற்றும் வேளாண் தொழில்நுட்பங்களையும் தனித்துவமாக பெற்றுள்ளனர். அவர்களின் வாழ்க்கை முறையானது வனங்களையே சார்ந்துள்ளது. காடுகளிலிருந்து உணவு, எரிபொருள், கட்டுமானப் பொருட்கள் மற்றும் மூலிகைகள் முதலானவற்றை சேகரித்து தங்கள் வாழ்வாதாரத்தை ஈட்டுகின்றனர். தமிழகச் சூழலில் பழங்குடியின மக்களின் வாழிடச் சூழல், பரப்பு, வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார நிலை ஆகியவை குறித்து இவ்வாய்வு அமைகின்றது.*

**குறிப்புச்சொற்கள்:** தமிழகப் பழங்குடியினர், மக்களின் வாழிவிடம், சூழல், பொருளாதாரம்.

**முன்னுரை**

மனித இனத்தில் தொன்மையான சமூகங்களாய் வாழ்ந்து வருபவர்கள் பழங்குடி மக்கள் ஆவர். மனித சமுதாயத்தின் தொன்மையை ஆராயும் போது, பழங்குடியின மக்கள் தங்களுக்கெனத் தனி பண்பாடும், கலாச்சாரமும் கொண்டு தனித்தனி இனக்குழுக்களாக வாழ்கின்றனர். பழங்குடி இன மக்கள் தங்களுக்கெனத் தனித்த குணாதிசயங்கள், சமூக மதிப்புகள், கலாச்சாரக் கட்டமைப்புகள், வாழும் முறைகள் ஆகியவைகளால் ஏனைய மக்களிடமிருந்து வேறுபட்டு நிற்கின்றனர். பல்வேறு நாடுகளில் வாழும் பழங்குடி மக்களின் வாழ்வியலில் ஒத்தப் பண்புக் கூறுகள் காணப்படினும் அந்நிலப்பரப்புகளுக்குரிய தனித்துவமானப் பண்புக் கூறுகளைப் பிரித்தரிய பழங்குடியின மக்கள் மீதான ஆய்வுகள் துணை செய்கின்றன. மானிடவியல் ஆய்வுகளில் பழங்குடியின மக்கள் மீதான ஆய்வுகள் காலத்தின் தேவையாக உள்ளது. அவ்வகையில் இந்த ஆய்வு தமிழகப் பழங்குடியின மக்களின் வாழிடச் சூழல், பொருளாதார நிலை ஆகியவை குறித்து எடுத்தியம்புகின்றது.

**பழங்குடி என்னும் சொல்லின் வரையறை**

மனித இனம், பரிணாம வளர்ச்சியின் இறுதி நிலையை அடைந்துள்ளது. தொடர் மாற்றங்களை ஏற்று வாழும் தற்காலச் சமூகத்திலும், தங்களின் தொன்மைக் கூறுகளை

மாறாமல் அப்படியே தக்கவைத்துக் கொண்டு வாழ்பவர்களே பழங்குடி மக்கள் ஆவர். இத்தகைய தொன்மைச் சமூகங்களை அடையாளம் கண்டு ஆராய்வதும், அவற்றைப் பதிவு செய்வதும் மனிதகுல வரலாற்றின் படிமலர்ச்சியையும், கால மாற்றங்களையும் தெளிவாக அறிவதற்குத் துணைபுரிகின்றன. அவ்வகையில், 'பழங்குடி' என்னும் சொல் சொல்லாராய்ச்சியிலும் வரலாற்றுப் பதிவிலும் மிக முக்கியத்துவம் பெறுகிறது. பழங்குடி என்னும் சொல்லிற்கு **"தொன்மரபு, ஆதிகாலத்தேரிய குடி, பழமையான குடி" (மதுரைத் தமிழ்ப் பேரகராதி, ப. 112)** என்று மதுரைத் தமிழ் பேரகராதி பொருள் தருகிறது. ஒரு நிலத்தின் பூர்வகுடிகளை அல்லது வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய காலத்திலிருந்தே தங்களின் மரபு மாறாமல் வாழ்ந்து வரும் தொன்மையான பாரம்பரியம் கொண்ட மனித சமூகத்தைக் குறிக்கிறது. பழங்குடி என்னும் சொல்லிற்குத், '**தொன்முதலியர்' (கலைச்சொல் பேரகராதி, ப. 215**) என்று கலைச்சொல் பேரகராதி விளக்கம் தருகிறது. மனித நாகரிகம் தோன்றுவதற்கும் முந்தைய ஆதிகாலத்து குடிகளைக் இச்சொல் குறிக்கிறது. இந்தியச் சூழலில், 'பழங்குடிகள்' என்கிற பொதுவான அடையாளச் சொல் தனித்துவமான பண்பாட்டு வாழ்க்கை முறைகளையும், பல்வேறு பெயர்களைக் கொண்ட மொழிகளையும் கொண்டு, சவாலான நிலப்பரப்புகளில் வாழும் ஒட்டுமொத்தக் குழுக்களையும் குறிப்பதாகக் கொள்ளலாம். இந்தியாவின் பன்முகத்தன்மைக்கு இவர்களது வாழ்வியலே மிக முக்கியச் சான்றாகும். பண்டைய இலக்கியமான சிலப்பதிகாரத்திலும் பழங்குடி என்னும் சொல் இடம்பெற்றுள்ளது. **"பதியெழு அறியாப் பழங்குடி கெழீஇய" (சிலம்பு., பா. 15)** என்று குறிப்பிடுகின்றது. பிழைப்பு தேடிப் புலம் பெயரும் தேவையற்ற பொருளாதாரத் தன்னிறைவும், தொன்மை மாறா மரபும் கொண்ட மூத்த குடிகள் என்று பொருள்படும். நாம் 'பழங்குடி' (Tribal) என்ற சொல்லைக் காடுகளிலும் மலைகளிலும் வாழும் மக்களைக் குறிக்கப் பயன்படுத்துகிறோம். ஆனால், சிலப்பதிகாரத்தில் இச்சொல் ஒரு நிலத்தில் பல தலைமுறைகளாகத் தொடர்ந்து வாழ்ந்து வரும் பூர்வகுடிகள் (Indigenous/Ancient inhabitants) என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

சிலப்பதிகார அகராதி பழங்குடி என்னும் சொல்லிற்குத், **"தொன்றுதொட்டு வாழ்ந்து வருகின்ற மக்கட் தொகுப்பு" (சிலப்பதிகாரச் சொல்லடைவு, ப. 115**) என்று விளக்கம் அளிக்கிறது. தங்கள் சொந்த ஊரை விட்டு அல்லது தாய்நாட்டை விட்டு வேறு இடங்களுக்குப் பெயர்ந்து செல்லாத, தொன்மையான பாரம்பரியமிக்க குடிமக்கள் என்பது இதன் பொருளாகும். பழங்குடி என்பதற்கு, **"பழமையான குடி வழிவழியாக நிலைப்பெற்று வரும் குடி" (தமிழ்-தமிழ் அகராதி, ப. 212**) என்று தமிழ் தமிழ் அகராதி குறிப்பிடுகின்றது. தங்களின் தொன்மையான கலை, கலாச்சாரம், மொழி மற்றும் சமூகக் கட்டமைப்பை மாற்றாமல் அப்படியே தக்க வைத்துக் கொண்டு வாழ்பவர்களே பழங்குடிகள் என்று அழைக்கப்படுகிறார்கள். TRIBE எனும் ஆங்கில சொல்லின் மொழிபெயர்ப்பாகப் பழங்குடி என்னும் சொல் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

> **பழங்குடி என்பர் ஒரு தனித்த கட்டுப்கோப்பான சமூகம் என்றும் அது தனித்த மொழி பண்பாட்டு வாழிடம் வாழ்க்கை முறை சமயம் போன்றவற்றை கொண்ட ஒரு குடி என்றும் கருத முடியும். (தமிழகப் பழங்குடிகள், ப. 51)**

மலர் - 5, இதழ் - 2, வைகாசி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

நவீன நாகரிகத்தின் வரவுகளால் தன் அடையாளம் சிதையாமல், தனக்கேயுரிய நிலத்தில், தனித்த மொழியும், இயற்கையோடு இயைந்த பண்பாட்டு விழுமியங்களும் கொண்டு, தமக்குள் வகுத்துக் கொண்ட அறக்கட்டுப்பாடுகளோடு வாழும் இனக்குழுவின் தூய வடிவமே பழங்குடி என்று தெளியலாம். பழங்குடி என்பதற்குத், **தொன்றுதொட்டு வருகின்ற குடியின்கட் பிறந்தார் (திருக்குறள் பரிமேலழகர் உரை, ப. 102)** என்கிறார். பல தலைமுறைகளாக நற்பண்புகளுடனும் ஒழுக்கத்துடனும் வாழ்ந்து வருகின்ற பாரம்பரியமிக்க உயர்குடியில் பிறந்தவர்கள் என்று பரிமேலழகர் உரை வாயிலாக அறிய முடிகிறது. பழங்குடி என்னும் சொல் குறித்த பரவலான கருத்துக்களைத் தொகுத்து அவற்றின் பொது பண்புகளைப் பின்வருமாறு வரையறை செய்கின்றார் அறிஞர் பக்தவச்சலபாரதி.

> **பழங்குடி என்பவர் ஒரு படித்தான சமூக குழுவினர். இவர்கள் தொடர்ச்சியான பொதுவான இடத்தில் வசிக்கக்கூடியவர்கள். பொதுவான கிளைமொழியைப் பேசுபவர்கள். ஒரு படித்தான பண்பாட்டு முறையைக் கொண்டவர்கள், பொதுவான மூதாதையரையும், பஞ்சாயத்து முறையையும், சமய நம்பிக்கை முறைகளையும் பின்பற்றுபவர். (சமூகவியல் மானிடவியல் கலைச்சொல் விளக்க அகராதி, ப. 176)**

என்று பதிவு செய்கிறார். இவ்விளக்கங்களையெல்லாம் தொகுத்துப் பார்க்கும் போது பழங்குடிகள் என்போர் மைய நீரோட்டத்திற்கு உரிய வாழ்வியல் சூழலில் இருந்து விலகியிருக்கிறார்கள. அவர்கள் எளிதில் சென்றடைய முடியாத தனித்து ஒதுங்கிய மலைக்காட்டுப்பகுதிகளில் வாழ்கின்றவர்கள். இயற்கையைத் தாயாகவும் தெய்வமாகவும் நம்பி, அதன் சீற்றங்களுக்கு அஞ்சி, கண்ணுக்குத் தெரியாத ஆவிகளின் வழிநடத்துதலிலும் சடங்குகளிலும் நம்பிக்கை கொண்டு, நவீன மாற்றங்களுக்கு ஆட்படாமல் தங்களின் ஆதித் தமிழ்/பழங்குடிப் பாரம்பரியத்தை அப்படியே தொடரும் குடிகளே பழங்குடிகள் ஆவர்.

> **மந்திரம் ஆவி இயற்கை இவற்றில் நம்பிக்கையும் இயற்கையில் அச்சமும் கொண்டு பழமையான பழக்க வழக்கங்களைக் கடைபிடிக்கும் மக்களே பழங்குடிகள் ஆவர். (கௌ. அஸ்வதி பூஜா, ப. 11)**

கௌ. அஸ்வதி பூஜா அவர்களின் கூற்று இங்கு நினைவுகூரத்தக்கது. தங்களின் முன்னோர்கள் வகுத்துத் தந்த ஆதி சடங்குகள், வழிபாட்டு முறைகள், வேட்டைத் தொழில்கள், மூலிகை மருத்துவ முறைகள் மற்றும் சமூகக் கட்டுப்பாடுகளை இவர்கள் அப்படியே மாறாமல் இன்றும் பின்பற்றி வருகின்றனர். ஒவ்வொரு சமூகத்தினரும் ஒரு தனித்த கிளை மொழியை பேசுகின்றனர். தனித்த வழிபாட்டு மரபுகளைக் கொண்டிருக்கின்றனர் என்று அறியமுடிகிறது.

> **பழங்குடிகள் என்போர் குறிப்பிட்ட ஒரு நிலப்பகுதியில் நீண்ட காலமாக தங்களுக்கு என தனி கலாச்சாரம் மொழி வாழ்க்கை முறையை கொண்டும் இயற்கையின் மடியில் வாழ்கின்ற மக்களே ஆவர். (மு.பெ.சுப்புலட்சுமி, ப. 243)**

இயற்கையை அழித்து தனது தேவையைப் பூர்த்தி செய்து கொண்டு வாழும் பெரும்பான்மை மக்களோடு ஒட்டாமல் இயற்கையோடு இணைந்த ஆதி மனிதனின் வாழ்முறையைப் பேரளவில் மாற்றங்கள் இன்றி இன்றும் பின்பற்றி வாழும் இனக்குழுவினரே பழங்குடியினர்.

**தமிழக பழங்குடியின் வாழிடம்**

தமிழகத்தின் மூத்த குடிகளானப் பழங்குடியின மக்கள், தங்களின் தொன்மை மாறா மரபுகளோடும் தனித்துவமான பண்பாட்டு விழுமியங்களோடும் மாநிலத்தின்

பல்லாயிரக்கணக்கான கிராமங்களில் பரந்து விரிந்து வாழ்ந்து வருகின்றனர். நவீன மாற்றங்கள் ஒருபுறம் நிகழ்ந்தாலும், தங்களின் ஆதி அடையாளங்களைச் சிதையாமல் பாதுகாத்து வரும் இம்மக்களின் வாழ்வியலையும், அவர்கள் இயற்கையோடு கொண்டுள்ள பிணைப்பையும் நிலவியல் ரீதியாக மூன்று பெரும்பிரிவுகளாகப் பகுக்க முடியும். மலையுச்சிகளை உள்ளடக்கிய மலைப்பகுதிகள், மலையும் சமவெளியும் இணையும் இடைநிலப் பகுதியான அடிவாரப்பகுதிகள் மற்றும் நகர்ப்புறங்களை ஒட்டிய சமவெளிப்பகுதிகள் ஆகியவையே அந்த மூன்று முதன்மை வாழிடங்களாகும். இத்தகைய நிலவியல் பிரிவுகளில், பெரும்பான்மையான தமிழ்நாட்டுப் பழங்குடியின மக்கள் தங்களின் முதன்மைத் தாயகமாகத் தேர்ந்தெடுத்து வாழ்ந்து வருவது மலைப்பகுதிகளையே ஆகும். நவீன உலகத்தின் நெரிசல்களிலிருந்து விலகி, தூய்மையான இயற்கை அரண்களாகத் திகழும் அடர்ந்த காடுகளும் ஓங்கிய மலைச்சிகரங்களுமே இவர்களின் புகலிடங்களாக விளங்குகின்றன. தமிழகத்தின் இயற்கை எழிலுக்கும் பல்லுயிர் பெருக்கத்திற்கும் சான்றாகத் திகழும் மேற்குத் தொடர்ச்சி மலை மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைத் தொடர்களே. இவர்களது பிரிக்க முடியாத வாழ்விடங்களாக அமைந்துள்ளன. (ராஜம்மா, வயது - 62)

தமிழ்நாட்டின் பழங்குடியின மக்கள் சமவெளிகளிலும் அடிவாரங்களிலும் பரவி வாழ்ந்தாலும், அவர்களின் ஆன்மாவும் வாழ்வியலும் இன்றும் இந்த இரு பெரும் மலைத்தொடர்களின் மடியிலேயே மிகக் கட்டுக்கோப்பாகத் துடித்துக் கொண்டிருக்கின்றன. தமிழகத்தின் காடுகளிலும் மலைகளிலும் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வரும் ஆதிக்குடிகள், தங்களின் நிலத்தோடும் மொழியோடும் கொண்டுள்ள ஆழமான பிணைப்பை வெளிப்படுத்தும் ஆகச்சிறந்த அடையாளம், அவர்கள் தங்கள் வாழிடங்களுக்குச் சூட்டியுள்ள பெயர்களாகும். தமிழ்நாட்டின் ஒவ்வொரு பழங்குடி இனத்தவரும், தாங்கள் கூடி வாழும் சிற்றூர்களுக்கும் கிராமங்களுக்கும் பிற மொழிகளின் கலப்பின்றி, தங்களின் சொந்தத் தாய்மொழிகளிலேயே பெயரிட்டு அழைக்கும் மரபினை இன்றும் மிகக் கட்டுக்கோப்பாகப் பேணி வருகின்றனர். நவீன உலகம் எத்தனையோ மாற்றங்களைச் சந்தித்தாலும், இவர்களது கிராமப் பெயர்கள் மட்டும் அவர்களின் தொன்ம வரலாற்றையும் மொழியியல் தூய்மையையும் இன்றும் சுமந்து நிற்கின்றன. (மதுமிதா, வயது - 18) இப்பழங்குடி மக்களின் கிராமப் பெயர்கள் வெறும் அடையாளக் குறியீடுகள் அல்ல; அவை அவர்கள் வாழும் நிலத்தின் இயற்கைச் சூழல், தாவரங்கள், விலங்கினங்கள் மற்றும் புவியியல் அமைப்பை அப்பட்டமாகப் படம் பிடித்துக் காட்டுபவை ஆகும்.

> **மலைவாழ் மக்கள் தங்கள் குடியிருப்பு உள்ள பகுதிகளை பலவிதமாக அழைக்கின்றனர். ஒவ்வொரு பழங்குடி சமூகப் பிரிவும் வேறு வேறு பெயர்களால் தங்கள் ஊர்களை அழைக்கின்றார்கள். இருளர் பழங்குடி மக்கள் தங்கள் ஊர்களை பதி என்று அழைக்கின்றார்கள் பல்வேறு பெயர்களை இணைத்து கூறினாலும் இறுதி சொல் பதி என்றே வருகிறது புஞ்சைப்பதி நீலாம்பதி திருப்பதி மற்றும் பல இடங்களில் முத்தூர் எனவும் பெயரிடுகின்றனர். (ஏ. தீபா, ப. 02)**

தங்களின் பேச்சு மொழியில் உள்ள தனித்துவமான சொற்களைக் கொண்டு, தாங்கள் வாழும் மலைச்சரிவு, ஓடை, காட்டின் அடர்த்தி அல்லது குறிப்பிட்ட மரங்கள் நிறைந்த பகுதி ஆகியவற்றின் அடிப்படையில் இக்கிராமப் பெயர்கள் அமைகின்றன.

- **சோளகர் - தொட்டி (அ) மொற்**
- **படகர் - ஹட்டி**
- **தொதவர்கள் - மந்து**
- **கோத்தர் - கோக்கால்**
- **இருளர் - பதி**
- **மலசர் - பொதி**
- **மலைமலசர் - பதி**
- **குரும்பர் - கொம்பை**
- **ஆலுக்குறும்பர் - சீமெ**
- **பணியர் - பாடி**
- **புலையர் - குடி**
- **காணிக்காரர் - காணிக்குடி (தமிழகப் பழங்குடிகள், ப. 48)**

பழங்குடியின மக்கள் கிராமங்கள் அனைத்தும் அவர்தம் கிளை மொழியிலேயே பெயர் பெறுகின்றன. இந்த மொழிசார்ந்த பெயரிடல் மரபு, அவர்களின் நிலத்தின் மீதான இறையாண்மையையும் ஆதி உரிமையையும் பறைசாற்றும் வரலாற்று ஆவணமாகத் திகழ்கிறது. ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் தங்களின் மொழிச் சொற்களைப் பெயராக நிலைநிறுத்துவதன் மூலம், அந்த நிலத்திற்கும் தங்களுக்குமான தொப்புள்கொடி உறவை அவர்கள் அடுத்தடுத்த தலைமுறைகளுக்குக் கடத்துகின்றனர். தமிழ்நாட்டுப் பழங்குடியினரின் கிராமப் பெயர்கள் என்பவை, எழுத்துவடிவம் பெறாத தங்களின் ஆதித் தாய்மொழிகளைத் தாய்மண்ணின் மீது அவர்கள் பொறித்து வைத்துள்ள அழியாத கல்வெட்டுகளாகும்.

**கிழக்கு தொடர்ச்சி மலைகளில் வாழும் பழங்குடி இன மக்கள்**

இந்தியாவின் இயற்கை அரணாகத் திகழும் கிழக்குத் தொடர்ச்சி மலைத்தொடர், பல்லுயிர் பெருக்கத்தின் உறைவிடமாக மட்டுமன்றி, ஏறத்தாழ அறுபதுக்கும் மேற்பட்ட ஆதிப் பழங்குடி இன மக்களின் தொன்மைமிகு தாயகமாகவும் விளங்கி வருகிறது. இந்த நெடிய மலைத்தொடரின் நீட்சியாக விளங்கும் தமிழகப் பகுதிகளில், தங்களின் தனித்துவமான பண்பாட்டு விழுமியங்களோடு ஏழு முதன்மையான பழங்குடி இன மக்கள் வாழ்ந்து வருகின்றனர். கிழக்குத் தொடர்ச்சி மலையின் உச்சிப் பகுதிகள், மலையடிவாரங்கள் மற்றும் அவற்றை ஒட்டிய சமவெளிப் பகுதிகள் எனத் தங்களின் வாழ்விடங்களை அமைத்துக் கொண்டுள்ள மலையாளி, கொண்டா ரெட்டி, குறிச்சான், குறுமன், சோளகர், ஊராளி மற்றும் இருளர் ஆகியோரே அந்த ஏழு தொல்குடியினராவர். இவர்களில் எண்ணிக்கையிலும் பரவலான வாழ்விடப் பின்னணியிலும் மிக முதன்மையானவர்களாக விளங்குபவர்கள் 'மலையாளி' பழங்குடியின மக்கள் ஆவர். தங்களின் பெயருக்கேற்ப, பெரும்பான்மையான மலையாளி மக்கள் இன்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளின் மடியிலேயே தங்களின் ஆதி வாழ்வியலைத் தொடர்ந்து வருகின்றனர். குறிப்பாக, தமிழகத்தின் வட மற்றும் மத்திய மாவட்டங்களில் பரவிக் கிடக்கும் ஜவ்வாது மலை, ஏலகிரி மலை, கல்வராயன் மலை, சேர்வராயன் மலை, சித்தேரிமலை, வச்சாத்தி மலை, ஜல்லுத்து மலை ஆகிய பகுதிகளில் இவர்களின் குடியிருப்புகள் அடர்த்தியாக அமைந்துள்ளன. மேலும், கஞ்சமலை, பாலமலை, கோதுமலை, பச்சைமலை, நகர மலை, கொல்லிமலை மற்றும் கடகமலை உள்ளிட்ட ஒட்டுமொத்தக்

கிழக்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளின் சமநிலப் பரப்புகளிலும் சரிவுகளிலும் இவர்களது கிராமங்கள் நிலைபெற்றுள்ளன. காடுகளுடனும் மலைகளுடனும் பிரிக்க முடியாத ஆன்மீக மற்றும் வாழ்வாதாரப் பிணைப்பைக் கொண்டுள்ள இம்மக்கள், நவீன காலத்தின் மாற்றங்களுக்கு மத்தியிலும் தங்களின் ஆதித் தமிழ் மரபையும், தனித்த சமூகக் கட்டுப்பாடுகளையும் இந்த மலைத்தொடரின் உறைவிடங்களிலேயே மிகச் செறிவாகப் பேணிப் பாதுகாத்து வருகின்றனர்.

**மேற்குத் தொடர்ச்சி மலைகளில் வாழும் பழங்குடி இனங்கள்**

தமிழகத்தில் வாழ்ந்து வரும் ஒட்டுமொத்த முப்பத்தேழு பழங்குடி இனங்களுள், பதினைந்து வகையான பழங்குடியினர் காடும் காடு சார்ந்த முல்லை நிலப் பின்னணியைக் கொண்ட கொங்கு நாட்டின் இரு பெரும் மலைத்தொடர்களையே தங்களின் பூர்விகத் தாயகமாகக் கொண்டுள்ளனர். மேற்குத் தொடர்ச்சி மலை மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலையின் அடர்ந்த காட்டுப்பகுதிகளில், பல நூற்றாண்டுகளாகத் தங்களின் மரபார்ந்த அடையாளங்கள் சிதையாமல் நிலைபெற்று வாழும் இத்தொல்குடிகள், மாவட்ட வாரியாகத் தமக்கான தனித்துவமான புவியியல் வாழிடங்களைப் பகிர்ந்து கொண்டுள்ளனர். இப்பகிர்வில், பல்லுயிர்ச் சூழல் நிறைந்த நீலகிரி மாவட்டம் ஆறு வகையான முதன்மைப் பழங்குடிகளின் உறைவிடமாகத் திகழ்கிறது. தொதவர், கோத்தர், குறுமர், இருளர், பணியர் மற்றும் காட்டுநாயக்கர் ஆகிய இவ்வாறு குடிகளும் நீலகிரியின் உயரமான மலைச்சரிவுகளிலும் அடர்காடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர். இதற்கு இணையாக, கொங்கு நாட்டின் மையப்பகுதியான கோயம்புத்தூர் மாவட்டத்தின் மலைப் பிரதேசங்களில் இருளர், காடர், மலசர், மகா மலசர், முதுவர் மற்றும் எரவல்லன் ஆகிய ஆறு வகை ஆதிக்குடிகள் தங்களின் வாழ்விடங்களை அமைத்துக் கொண்டுள்ளனர். மேலும், ஈரோடு மாவட்டத்தின் தாளவாடி மற்றும் சத்தியமங்கலக் காட்டுப்பகுதிகளில் சோளகர் மற்றும் ஊராளி ஆகிய இரு பழங்குடியினரும், கிருஷ்ணகிரி மாவட்டத்தின் எல்லைப் பகுதிகளில் இருளர்களின் ஒரு பிரிவினரும் காலங்காலமாக வாழ்ந்து வருகின்றனர். மறுபுறம், திண்டுக்கல் மாவட்டத்தின் பழனி மலைப் பகுதிகளில் பளியர் பழங்குடியினர் செறிந்து வாழ, கிழக்குத் தொடர்ச்சி மலையின் நீட்சியில் மலையாளிப் பழங்குடியின மக்கள் பெரும்பான்மையாகக் குடியேறியுள்ளனர். அதன்படி, சேலம் மாவட்டத்தின் கொல்லிமலை மற்றும் ஏற்காடு (சேர்வராயன்) மலைப் பகுதிகளிலும், நாமக்கல் மாவட்டத்தின் பச்சை மலைப் பகுதியிலும், தருமபுரி மாவட்டத்தின் சித்தேரி மலைப் பகுதிகளிலும் இம்மலையாளி குடிகள் தங்களின் வேளாண் மரபைத் தொடர்ந்து வருகின்றனர். இவர்களோடு, மேற்குத் தொடர்ச்சி மலையின் மிக முக்கிய அரணான ஆனைமலை மற்றும் பழனி மலைத் தொடர்களைத் தங்களின் பிரிக்க முடியாத வாழிடமாகக் கொண்டு குன்னுவர், புலையர், மலைவேடர், பளியர், பள்ளியன், மலசர், முதுவன், முடுவர் மற்றும் மன்னான் ஆகிய ஒன்பது வகையான பழங்குடியின மக்கள் இயற்கை சார்ந்து வாழ்ந்து வருகின்றனர். நவீன நாகரிகத்தின் எவ்வித ஒவ்வாமைகளும் இன்றி, காடுகளையும் மலைகளையும் தங்களின் குலதெய்வங்களாகக் கருதி வாழும் இக்குடிகள், கொங்கு நிலத்தின் ஆகச்சிறந்த வரலாற்றுப் பேரடையாளங்கள் ஆவர்.

**பழங்குடி மாவட்டம்**

இந்தியத் தீபகற்பத்தின் இரு பெரும் இயற்கை அரண்களான மேற்குத் தொடர்ச்சி மலையும் கிழக்குத் தொடர்ச்சி மலையும் ஒன்றோடொன்று கைகோர்த்துத்

தழுவிக்கொள்ளும் உன்னதமான புவியியல் சந்திப்பாக, 'நீல மலை' என்று போற்றப்படும் நீலகிரி மாவட்டம் திகழ்கிறது. இந்தத் தகைசால் நிலப்பரப்பு, தன் கண்கவர் இயற்கை எழிலால் மட்டுமன்றி, மானுடவியல் மற்றும் இனக்குழு ஆய்வுகளின் அடிப்படையில் உலகப் புகழ்பெற்ற ஒரு தனித்துவமான வாழ்விடமாகவும் விளங்குகிறது. தமிழகத்தின் மிகத் தொன்மையான, தனிச்சிறப்பு மிக்க ஆதிப் பழங்குடிச் சமூகங்களின் உறைவிடமாகத் திகழ்வதே இந்த மாவட்டத்தின் வரலாற்றுப் பெருமையாகும்.

> **தமிழகத்தில் மட்டுமே ‘தொதவர்’, ‘கோத்தர்’, ‘குறும்பர்’, ‘பணியர்’, ‘இருளர்,’ ‘காட்டுநாயக்கர்’ ஆகிய ஆறு சமூகங்களும் ‘தொன்மைப் பழங்குடி குழுக்கள்’ இருப்பதாக வரையறுக்கப்பட்டன. இவ் ஆறு தொல் பழங்குடிக் குழுக்களும் நீலகிரி மாவட்டத்தில்தான் இன்றளவும் வசித்துவருகின்றனர். (துரைமுருகன்.செ, ப. 02)**

மத்திய அரசால் 'மிகவும் நலிவடைந்த பழங்குடியினர்' (Particularly Vulnerable Tribal Groups - PVTGs) என வகைப்படுத்தப்பட்டு, அழியும் நிலையில் உள்ளதாகக் கருதப்படும் தமிழ்நாட்டின் அனைத்துக் குறிப்பிடத்தக்க ஆறு ஆதிப் பழங்குடிக் குழுக்களும் இந்நீல மலையின் மடியிலேயே ஒன்றிணைந்து வாழ்ந்து வருகின்றனர். தொதவர், கோத்தர், குறுமர், இருளர், பணியர் மற்றும் காட்டுநாயக்கர் ஆகிய இந்த ஆறு வகைமைகளும் ஒரே புவியியல் எல்லதிக்குள், தத்தமது தனித்துவமான அடையாளங்களோடு வசிப்பது என்பது உலக அளவில் மானுடவியலாளர்களை வியப்பில் ஆழ்த்தும் ஒரு வியத்தகு நிகழ்வாகும். இதன் காரணமாகவே, நீலகிரி மாவட்டமானது சர்வதேச அளவில் 'இனக்குழுக்களின் அருங்காட்சியகம்' போல, மானுடவியல் தளத்தில் பெரும் புகழுடன் திகழ்கிறது. இங்கு வாழும் ஒவ்வொரு குடிகளும் இயற்கையோடு தமக்கேயான பிரத்தியேகப் பிணைப்பைக் கொண்டுள்ளனர். மாடுகளையே தெய்வமாகக் கருதிப் புல்வெளிகளில் வாழும் தொதவர்கள், தனித்த இசை மரபும் கைவினைத் திறனும் கொண்ட கோத்தர்கள், காடுகளின் காவலர்களாக விளங்கும் குறுமர்கள், மூலிகை அறிவில் சிறந்த இருளர்கள், வயல்வெளிகளோடும் கானகத்தோடும் இயைந்த பணியர்கள் மற்றும் தேன் சேகரிப்பதில் வல்லமை மிக்க காட்டுநாயக்கர்கள் என இந்த ஆறு தொல்குடிகளும் தங்களின் ஆதித் தாய்மொழிகளையும், வழிபாட்டு முறைகளையும், சமூகக் கட்டுப்பாடுகளையும் இன்னமும் மாறாமல் காத்து வருகின்றனர். சுருக்கமாகக் கூறின், நீலகிரியின் பல்லுயிர்ச் சூழலுக்கு இணையான ஒரு பல்லினப் பண்பாட்டுச் செழுமையை இந்த ஆறு பழங்குடி இனங்களும் தங்கள் வாழ்வியலின் மூலம் இந்நிலத்திற்குத் தந்து கொண்டிருக்கின்றனர்.

> **மாநிலத்தின் ஏனைய மாவட்டங்கள் அதிகபட்சம் 5 பழங்குடிக் குழுக்களைத் தன்னகத்தே கொண்டிருக்க, நீலகிரியில் மட்டுமே 6 பண்டைய பழங்குடிக் குழுக்கள் இனங்காணப்படுவதால் இது தமிழ்நாட்டின் பழங்குடி மாவட்டம் என மிகப் பொருத்தமாக அழைக்கப்படுகிறது. (நீலகிரி குறும்பர் பழங்குடி ஓவிய மரபு, ப. 6)**

என முனைவர் சி.மகேசுவரன் குறிப்பிடுகின்றார். தமிழ்நாட்டில் ஒரே மாவட்டத்திற்குள் பத்துக்கும் மேற்பட்ட வெவ்வேறு பழங்குடி இன மக்கள் காணப்படுவதைக் கருத்தில் கொண்டு தமிழ்நாட்டில் பழங்குடியினர் மாவட்டம் என்று நீலகிரி மாவட்டம் குறிக்கப்படுகிறது. தமிழகத்தின் மிகத் தொன்மையான ஆதிப் பழங்குடிச் சமூகங்களின் முதன்மைத் தாயகமாகத் திகழும் நீலகிரி மாவட்டம், மானுடவியல் மற்றும் பண்பாட்டுத் தளங்களில் தமிழ்நாட்டின் மிக உயரிய சிறப்பிடத்தைப் பெற்று விளங்குகிறது. மத்திய

அரசால் மிகவும் நலிவடைந்த, தனி கவனத்திற்குரிய பழங்குடியினராக (PVTGs) வகைப்படுத்தப்பட்டுள்ள தொதவர், கோத்தர், குறும்பர், பணியர், இருளர் மற்றும் காட்டுநாயக்கர் ஆகிய ஆறு முதன்மை இனக்குழுக்களும் ஒட்டுமொத்தமாக இந்நீல மலையின் மடியிலேயே ஒன்றிணைந்து வாழ்வது, இம்மாவட்டத்திற்கு உலகளாவிய அளவில் ஒரு வரலாற்றுப் பெருமையைத் தேடித்தந்துள்ளது. இருப்பினும், பரந்துபட்ட ஆய்வுகளின் அடிப்படையில் நீலகிரியின் கானகச் சூழலில் மொத்தம் பத்து வகையான தனித்துவமிக்க பழங்குடி இனக்குழுக்கள் தங்களின் மரபார்ந்த அடையாளங்களோடு வாழ்ந்து வருகின்றனர். தொதவர், கோத்தர், இருளர், பணியர் மற்றும் காட்டுநாயக்கர் ஆகியோருடன், கசவர் மற்றும் குறும்பர் இனத்தின் உட்பிரிவுகளான ஆலுக்குறும்பர், முள்ளுக்குறும்பர், பெட்டக்குறும்பர், தேனுக்குறும்பர் ஆகிய பத்துக் குடிகளும் இந்த மலைப்பகுதியின் பல்லுயிர்ச் சூழலோடு தங்களின் வாழ்வியலைப் பிணைத்துக் கொண்டுள்ளனர். காடுகளையும் மலைகளையும் தங்களின் வாழ்வாதாரமாகக் கொண்ட இந்த ஒவ்வொரு குழுவும், தமக்கெனத் தனித்த ஆதித் தாய்மொழிகளையும் மாறுபட்ட வாழ்வியல் சடங்குகளையும் கொண்டு விளங்குகின்றன. இப்பத்துத் தொல்குடிகளுள், நீல மலையின் ஆகப்பழமையான மூத்தக் குடிகளாகக் கருதப்படுபவர்கள் 'தொதவர்' (Toda) பழங்குடியின மக்கள் ஆவர். பல்லாயிரம் ஆண்டுகளாக இப்பேரண்டத்தின் நாகரிக மாற்றங்கள் எதற்கும் உட்படாமல், தங்களின் ஆதித் தன்மையையும் தனித்துவமான ஆடை, இசை மற்றும் மாடு வளர்ப்பு மரபுகளையும் மாறாமல் காத்து வரும் இவர்கள் இந்நிலத்தின் நகராக்கல்வெட்டுகளாகத் திகழ்கின்றனர். இத்தகைய தொன்மை வாய்ந்த தொதவர் பெருமக்கள், தங்களின் தனித்துவத்தை ஒருபுறம் பேணினாலும், தங்களோடு வாழும் பிற ஒன்பது பழங்குடி இன மக்களுடனும், சமவெளியிலிருந்து புலம்பெயர்ந்த ஏனைய பொதுச் சமூகத்தினருடனும் எவ்வித முரண்களுமின்றி, இணக்கமான நட்புணர்வுடன் கூடி வாழ்வது உலகிற்கே ஒரு முன்மாதிரியான வாழ்வியல் விழுமியமாகும்.

**பொருளாதார நிலை**

இயற்கையைத் தன் சுயநலத்திற்காகச் சுரண்டாமல், அதன் சமநிலையை எதிர்க்காமல், காட்டின் வளங்களை மிகக் கட்டுப்பாட்டுடன் பயன்படுத்தி வாழ்வதே பழங்குடிகளின் வாழ்வியல் தத்துவமாகும். இத்தகைய விழுமியங்களைக் கொண்ட தமிழ்நாட்டின் பல பழங்குடி இன மக்கள், ஆதிகாலம் தொட்டு இன்று வரை காட்டின் இயல்பு மாறாமல் 'வேட்டையாடி உணவு சேகரிக்கும்' தொன்மையான பொருளாதார முறையையே தங்களின் முதன்மை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். காடர், பளியர், இருளர், காணிக்காரர், மலைக்குறவர், முதுவர், ஊராளி மற்றும் குறும்பர் முதலான பழங்குடிகள் இவ்வகை இயற்கையோடு இயைந்த பொருளாதார வாழ்வியலைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

> **இன்று உலக மக்கள் தொகையில் 1:4 மில்லியனுக்குள் சற்று குறைவானவர்கள் அதாவது 0.003 சதவீதம் மக்கள் வேட்டையாடி உணவு சேகரித்து வாழும் நிலையில் உள்ளனர். பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பயிரிடுதலும் கால்நடை வளர்த்தலும் முக்கியத் தொழிலாக மாறியுங்கூட இன்றும் இவ்வளவு எண்ணிக்கையினர் இந்த பொருளாதார முறையை கொண்டுள்ளனர். ( தமிழகத் தொல்குடிகள், ப. 121)**

எல்லாவற்றையும் நுகர்ந்து தீர்க்கத் துடிக்கும் நவீன மனிதன், பேராசையின்றி நிறைவோடு வாழும் இத்தொல்குடிகளிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய அறப்பண்புகள் ஏராளமாக உள்ளன. பழங்குடி மக்களின் மரபார்ந்த பொருளாதார முறைகளையும், அவர்களின் வாழ்வியல் நுட்பங்களையும் ஆவணப்படுத்துவது சமகாலத்தின் மிக முக்கிய தேவையாகும். மலை அடிவாரங்களில் எளிய முறையில் வேளாண்மை செய்து வாழும் பளியர் பழங்குடி மக்களின் வாழ்வாதாரம் சுவாரசியமானது. இவர்கள் தங்கள் வாழிடங்களுக்கு அருகிலுள்ள நீர்நிலைகளில் மீன்பிடித்தல் மற்றும் காடுபடு பொருட்களைச் சேகரித்தல் ஆகியவற்றையே தங்களின் முதன்மைத் தொழில்களாகக் கொண்டுள்ளனர்.

> **தமிழில் கருங்கொடி என அழைக்கப்படும் கொடியின் இலைகளைக் கசக்கி நீரில் வீசுவர் சிறிய நேரத்தில் மீன்கள் தண்ணிரில் மேலே வந்து மிதக்கும். நயமற்றனவாக அமைக்கப்பட்ட துண்டில்கலை கொண்டு மீன்கள்ப் பிடிக்கப் பயன்படுத்துகின்றனர். (சோளகர் வாழ்வும் பண்பாடும், ப. 215)**

இயற்கைக்கு எவ்விதத் தீங்கும் விளைவிக்காமல், தங்களின் தேவைக்கானதை மட்டும் காட்டிடமிருந்து பெற்றுக் கொள்ளும் இத்தகைய தொல்மூப்பறிவும் பொருளாதார முறையும் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டியவை.தமிழகத்தின் தொல்குடிகளான காடர்கள், மலச்சர்கள் மற்றும் பணியர் பழங்குடிச் சமூகங்களின் வாழ்வாதாரக் கட்டமைப்பு, இயற்கையோடும் வனவிலங்குகளோடும் பிரிக்க முடியாதபடி பிணைந்துள்ளது. இச்சமூகங்களைச் சேர்ந்த ஆண்கள், தலைமுறை தலைமுறையாகத் தங்களுக்குள் கடத்தப்பட்டு வந்த தொல்மரபு அறிவின் துணைகொண்டு, விலங்குகள் சரணாலயங்களில் மிகச்சிறந்த யானைப் பாகன்களாகத் தங்களின் பங்களிப்பை வழங்கி வருகின்றனர். அதேவேளையில், இவர்களது சமூகப் பொருளாதாரக் கட்டமைப்பில் பெண்களின் உழைப்பு சமத்துவமான வேலைப் பகிர்வின் அடிப்படையில் ஆழமாக வேரூன்றியுள்ளது. ஆண்கள் வனவிலங்குப் பராமரிப்பில் ஈடுபட, பெண்கள் காடுகளின் உள்ளடுக்குகள் வரை சென்று காடுபடு மூலிகைகள், மருத்துவப் பட்டைகள், மரப் பிசின்கள், தூய தேன், உணவுக்கான காட்டுக்கிழங்குகள் மற்றும் பழங்களை மிக நுட்பமாகச் சேகரித்து, அவற்றை விற்பனை செய்வதன் மூலம் தங்களின் குடும்பப் பொருளாதாரத்தை நிலைநிறுத்துகின்றனர். மற்றொரு புறம், ஈரோடு உள்ளிட்ட மேற்குத் தொடர்ச்சி மலைப் பரப்பில் வாழும் சோளகர் பழங்குடியினர், காட்டின் பல்லுயிர்ச் சூழலைச் சிதைக்காமல் வாழ்வாதாரம் ஈட்டும் தனித்துவமான பொருளாதார மாதிரியைக் கொண்டுள்ளனர். காடுகளிலிருந்து நெல்லிக்காய், சீமார் புல், கல்பாசி, சீயக்காய் மற்றும் காட்டு எலுமிச்சை போன்ற காடுபடு பொருட்களைச் சேகரிப்பதில் இவர்கள் பேராற்றல் மிக்கவர்கள். குறிப்பாக, சோளகர்களின் காடறிவிலும் மரபார்ந்த உணவுச் சேகரிப்பிலும் தேன் அறுவடை என்பது மிக முதன்மையான இடத்தைப் பெறுகிறது; காடுகளின் சூழமைவுக்கு ஏற்ப, தங்களின் அரிய பட்டறிவின் மூலம் அவர்கள் கண்டறிந்து சேகரிக்கும் தேன் வகைகள் நான்கு ஆகும்.

- **பெருந்தேன்**
- **அடுக்குத்தேன்**
- **கொம்புத்தேன்**
- **கொசுத்தேன் (சோளகர் வாழ்வும் பண்பாடும், ப. 53)**

இத்தகைய ஆண்-பெண் வேலைப் பகிர்வும், காட்டைப் பாதுகாத்து அதனிடமிருந்து தங்களுக்குத் தேவையானதை மட்டும் பெற்றுக்கொள்ளும் தொல்மூப்பறிவும் சமகால உலகம் பயில வேண்டிய உன்னத வாழ்வியல் நெறிகளாகும்.

தேனெடுப்பதை பிரதான தொழிலாக கொண்டவர்கள். ஜேனுக் குறும்பர்கள். தொதவர்கள் கால்நடைகளை வளர்க்கின்றனர். குறிப்பாக எருமைகளை வளர்க்கின்றனர். பால் மற்றும் பால் சார்ந்த பொருட்களை உற்பத்தி செய்து தங்கள் பொருளாதாரத்தை ஈடுபடுகின்றனர். கோத்தர்கள் பல தொழில்கள் செய்யும் கைவினைஞர்களாக உள்ளனர்.

நீலகிரி மலையின் தொல்குடிகளான கோத்தர் பழங்குடியினர், பன்முகத் தொழிற்துறைகளில் ஆளுமை மிக்க கைவினைஞர்களாகத் திகழ்கின்றனர். இவர்கள் தங்களின் அரிய தொல்மரபு அறிவின் துணைகொண்டு, களிமண்ணைக் கொண்டு மண்பானைகள் செய்யும் குயவர்களாகவும், பொன் மற்றும் வெள்ளியை உருக்கி நுட்பமான ஆபரணங்களை வடிவமைக்கும் தட்டர்களாகவும், இரும்பு வேலைகளில் தேர்ந்த கம்மாளர்களாகவும் விளங்குகின்றனர். கொள்ளுத் தொழில் (கொல்லர்), தச்சுத் தொழில், நெசவுத் கலை மற்றும் தனித்துவமான மரபார்ந்த இசைக்கலை எனப் பன்முகத் திறன்களைத் தங்களுக்குள் கடத்திவந்துள்ள இச்சமூகத்தினர், ஒரு முழுமையான சுயசார்புப் பொருளாதார மாதிரியைத் தங்களின் வாழ்விடங்களில் நிலைநிறுத்தியுள்ளனர். இருப்பினும், நவீனப் பொருளாதார மாற்றங்களுக்கு ஏற்ப தற்போதைய சூழலில் பழங்குடி மக்களின் வாழ்வாதார முறைகள் பெரும் உருமாற்றத்தைச் சந்தித்து வருகின்றன.

> **பழங்குடியினர்கள் பெரும்பாலும் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் தான் இன்றளவும் வாழ்கின்றனர். இந்திய அரசு ஏராளமான நலத்திட்டங்களையும், உதவிகளையும் வழங்கி வருவதால் ஓரளவிற்கு கல்வியறிவு பெற்றுள்ளனர். இருப்பினும், அனைத்து சலுகைகளும் முழுமையாக பெற வேண்டும். மேலும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், மானிட செயற்பாட்டாளர்கள், மனித உரிமை கழகத்தினர் உதவிக்கரம் நீட்ட வேண்டும்.(இரவிக்குமார்.கு, ப. 2)**

இன்றளவும் பெரும்பாலான பழங்குடியின மக்கள் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையிலேயே வாழ்கின்றனர். இந்திய அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் உதவிகளின் காரணமாக அவர்கள் ஓரளவிற்கு கல்வியறிவு பெற்றுள்ள போதிலும், அரசின் அனைத்துச் சலுகைகளும் அவர்களுக்கு முழுமையாகச் சென்றடைய வேண்டியது இன்னமும் அவசியமாக உள்ளது. எனவே, அவர்களின் ஒட்டுமொத்த மேம்பாட்டிற்கு அரசின் திட்டங்களோடு இணைந்து, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், மானுடவியலாளர்கள் மற்றும் மனித உரிமை அமைப்புகளும் தங்களின் ஆதரவையும் உதவிக்கரத்தையும் நீட்ட வேண்டும். பெரும்பாலான பழங்குடியின மக்கள் தங்களின் பாரம்பரிய வாழ்விடங்களுக்கு அருகாமையில் பரவியுள்ள காபித் தோட்டங்கள், தேயிலைத் தோட்டங்கள், விவசாய வயல்கள் மற்றும் வனவிலங்குச் சரணாலயங்கள் ஆகியவற்றில் வாரக்கூலிகளாகவும் மாதக்கூலிகளாகவும் தங்களைப் பணிகளில் ஈடுபடுத்திக் கொள்கின்றனர். இன்றைய காலகட்டத்தில், பல பழங்குடியினர் தங்களின் மரபார்ந்த வேளாண்மையையும், காடுசார் பொருட்களின் சேகரிப்பையும் கைவிடாமல், அவற்றுடன் இந்தத் தோட்டக் கூலித்தொழிலையும் இணைத்துக் கொண்டு ஒரு கூட்டுப் பொருளாதார

(Mixed Economy) வாழ்வாதார முறையின் மூலம் தங்களின் வாழ்வியலைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

**முடிவுரை**

தமிழகத்துப் பழங்குடிகளின் வாழிடச் சூழலும் அவர்களின் மரபார்ந்த பொருளாதார முறைகளும், மனித குலம் இயற்கையோடு எவ்வாறு இணக்கமாக வாழ வேண்டும் என்பதைக் கற்பிக்கும் உன்னதமான வாழ்வியல் பாடங்களாகும். பளியர்களின் கருங்கொடி மூலிகை வழி மீன்பிடி நுட்பம், சோளகர்களின் நாற்பெரும் தேன் அறுவடை, கோத்தர்களின் சுயசார்பு மிக்க பன்முகக் கைவினைத் திறன்கள், மற்றும் காடர்கள், மலச்சர்கள், பணியர்களின் வனவிலங்கு மேலாண்மை அறிவு ஆகிய யாவும் வெறும் பிழைப்புக்கான வழிகள் மட்டுமல்ல; அவை காட்டின் பல்லுயிர்ச் சூழலைச் சிதைக்காமல் பாதுகாக்கும் தொல்மூப்பறிவின் எச்சங்கள். குறிப்பாக, இச்சமூகங்களில் நிலவும் ஆண்-பெண் வேலைப் பகிர்வின் சமநிலை, நவீன உலகம் இன்னும் எட்ட முயலும் பாலினச் சமத்துவத்திற்கு மிகச்சிறந்த சான்றாகும். இருப்பினும், சமகாலப் பொருளாதார நகர்வுகளும் காடுகள் மீதான நவீன ஆதிக்கமும் இவர்களது பாரம்பரிய கூட்டுப் பொருளாதாரக் கட்டமைப்பில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. தங்களின் பூர்வகுடித் தொழில்களோடு, அருகமைந்த தேயிலை-காபித் தோட்டங்களிலும் சரணாலயங்களிலும் கூலித்தொழிலாளர்களாக மாறும் இவர்களின் இன்றைய நிலை, மரபுக்கும் நவீனத்துவத்திற்கும் இடைப்பட்ட ஒரு கூட்டு வாழ்வாதாரப் போராட்டத்தையே காட்டுகிறது. எனவே, மாறிவரும் சூழலில் இப்பழங்குடி மக்களின் தனித்துவமான வாழ்விடங்களைப் பாதுகாப்பதோடு, தலைமுறை தலைமுறையாக அவர்கள் பேணி வரும் மரபார்ந்த பொருளாதார நுட்பங்களையும் சூழலியல் அறிவையும் ஆவணப்படுத்திப் பாதுகாப்பது சமகாலத்தின் மிக அவசரமான, அவசியமான காலத்தின் தேவையாகும்.

**குறிப்புகள்**

[1] இரவிகுமார், கு. “இனவரைவியல் நோக்கில் பழங்குடிகள் மற்றும் நாடோடிகள்.” *பொற்றாமரை ஆய்விதழ்*, இதழ் 7, மே 2025.
[2] கந்தையா பிள்ளை, ந. சி. *தமிழ்-தமிழ் அகராதி.* ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், 2003.
[3] கலைச்சொல்லாக்கக் குழு. *கலைச்சொல் பேரகராதி.* தமிழ் இணையக் கல்விக்கழகம், 2009.
[4] சந்தியா நடராஜன். *மதுரைத் தமிழ்ப் பேரகராதி.* சந்தியா பதிப்பகம், 2001.
[5] ச. வே. சுப்பிரமணியன். *சிலப்பதிகாரச் சொல்லடைவு.* தமிழ்ப் பதிப்பகம், 1972.
[6] சுப்பிரமணியன், ச. வே. *சமூகவியல் மானிடவியல் கலைச்சொல் விளக்க அகராதி.* தமிழ்ப் பல்கலைக்கழகம், 2003.
[7] சுப்புலட்சுமி, மு. பெ. “இனவரவியல் நோக்கில் கழுதை பாதை.” *தமிழ் மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 8, இதழ் 2, ஜனவரி 2026.
[8] தீபா, ஏ. “பழங்குடியினர் பண்பாடு மற்றும் தொழில் முறைகள்.” *சர்வதேச தமிழ் ஆய்விதழ்*, தொகுதி 7, மலர் 3, ஜனவரி 2022, doi:10.34256/irjt22361.
[9] துரைமுருகன், செ. “தொல்குடியும் தொல் தமிழும்.” *பதிவுகள் மின்னிதழ்*, ISSN 1481-2991.
[10] பகத் சிங். *சோளகர் வாழ்வும் பண்பாடும்.* அடையாளம் பதிப்பகம், 2019.
[11] பக்தவச்சல பாரதி. *தமிழகத் தொல்குடிகள்.* அடையாளம் பதிப்பகம், 2017.
[12] பக்தவச்சல பாரதி. *தமிழகப் பழங்குடிகள்.* அடையாளம் பதிப்பகம், 2013.

[13] புலியூர்க் கேசிகன், தெளிவுரையாசிரியர். *திருக்குறள் பரிமேலழகர் உரை செம்பதிப்பு*. பூம்புகார் பதிப்பகம், 2018.
[14] மகேஸ்வரன், ச. *நீலகிரி குறும்பர் பழங்குடி ஓவிய மரபு*. இந்தியப் பழங்குடி மக்கள் பண்பாட்டு மையம், 2018.
[15] வேங்கடசாமி நாட்டார், நா. மு. *சிலப்பதிகாரம் மூலமும் உரையும்*. சாரதா பதிப்பகம், 2008.

**தகவலாளர்கள்**

[16] ராஜம்மா. தனிப்பட்ட நேர்காணல். மசினகுடி கூடலூர், வயது 62.
[17] மதுமிதா. . தனிப்பட்ட நேர்காணல். குஞ்சப்பனை கோத்தகிரி, வயது 18.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.